Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 21, 2024

வியாழக்கிழமை நவம்பர் 21, 2024 | ஒளி: 10 கதிர்: 097 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## அரிசி இறக்குமதி

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக வெளிநாட்டில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 65,000 மெற்றிக் தொன் அரிசியானது இறக்குமதி செய்யப்படவுள்ளது.

நாட்டின் அரிசி நெருக்கடி தொடர்பில், அரிசி இறக்குமதியாளர்களுக்கும், சதொச உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதுடன், எதிர்வரும் பெரும்போக நெல் அறுவடை வரை அரிசிக்கான தேவையை

தொடர்ச்சி P2

## 10 வருடங்களுக்குப் பின் பிரசவம்: தாயும் சேயும் அகால மரணம்

எஸ்.ஆர்.லொசேரியன் லெம்பேட்

மன்னாரில் தாயும் சேயும் அகால மரணமான சம்பவம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழு, புதன்கிழமை (20) காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம்.ஹனிபா தெரிவித்துள்ளார்.

மன்னார் - பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளம் தாய் வேணுஜா என அழைக்கப்படும் ஜெகன் ராஜ சிறி, திருமணமாகி 10 வருடங்களாகப் பிள்ளை இல்லாத நிலையில், செவ்வாய்க்கிழமை (19) பிரசவத்திற்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை யின் போது தாயும் சேயும் மரணமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்து மகப்பேற்று விடுதியில் போராட்டம் நடத்திய நிலையில் வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் நீதவான் இறந்த தாய் மற்றும் சேயின் சடலங்களைப் பிரேதப் பரிசோதனைக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காக வும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசேட குழு புதன்கிழமை (20) காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

மேலும், மாவட்ட ரீதியாக விசாரணைகள் முன்னெடுக்கப் படவுள்ளதோடு வடமாகாண சுகாதார அமைச்சிடமும் விசாரணைகளை முன்னெடுக்கக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

விசாரணையின் முடிவில் தவறிழைத்தமை கண்டுபிடிக்கப்பட்டால் உரியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



புதிய பாராளுமன்றத்தின்

# முதல் நாள் இன்று



### வாக்கெடுப்பு போன்றன சபாநாயகரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும்

பத்தாவது பாராளுமன்றத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நம்வபர் 14ஆம் திகதி இடம்பெற்றது. இதில் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் 196 உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவு செய்யப்படும் 29 உறுப்பினர்கள் என ஒட்டுமொத்தமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும். எனினும், பல கட்சிகள் தங்களுக்குக் கிடைத்த தேசியப் பட்டியலுக்கு உறுப்பினர்களை இதுவரையிலும் தெரிவு செய்யாமையால், வியாழக்கிழமை (21) ஆரம்பமாகும் முதலாவது அமர்வில், 225 உறுப்பினர்களின் பிரசன்னம் இருக்காது.

தொடர்ச்சி P2

## வர்த்தமானியை இரத்து செய்ய முடியாது

புதிய ஜனநாயக முன்னணியின் (NDF) தேசியப் பட்டியலில் ரவி கருணாநாயக்கவை எம்.பியாக நியமித்தமை தொடர்பான சர்ச்சை தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பட்டியலின் பெயரை உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பித்ததன் பின்னர் வர்த்தமானி மூலம் ஆணைக்குழு தனது கடமையை நிறைவேற்றியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




## ஹரினுக்கு பிணை

பதுளையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது பொலிஸாருடன் இடம்பெற்ற முறுகல் நிலை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஹரின் பெர்னாண்டோவை புதன்கிழமை (20) பதுளை பொலிஸில் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹரின் பெர்னாண்டோ மற்றும் அவரது ஆதரவாளர்கள் பதுளை நகரில் '10'ஆம் இலக்கம் கொண்ட சட்டைகளை அணிந்து கொண்டு நடமாடியதால் பொலிஸாருடன் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 5 மணிநேர வாக்குமூலத்தின் பின் வெளியேறினார் பிள்ளையான்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இன்று (20) காலை முன்னிலையாகியிருந்த நிலையில் தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் செனல் 4 தொலைக்காட்சி

தொடர்ச்சி P2

## CIDயில் ஸ்ரீரங்கா



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அவர்,

தொடர்ச்சி P2




## மண்மேடு விழுந்ததில் மாணவன் பலி

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதமஹனுவர வத்துலியத்த கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கல்லவத்த பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 16 வயதான டி.எம்.சேனாரா தில்ஷன் என்ற மாணவனை உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மனைவியை எரித்து கொன்ற கணவன்

மனைவிக்கு வேறு ஒருவருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்ததை அடுத்து, கணவன், மனைவியின் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரித்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான மனைவி, சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் செவ்வாய்க்கிழமை (19) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

புத்தளம்-தில்டியா பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான ஜமால்தீன்



பாத்திமா சபுனா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மனைவி எரிந்துகொண்டிருந்த போது, அதனை அணைக்கச் சென்ற கணவனுக்கும் சிறு தீக்காயங்கள் ஏற்பட்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிந்துஜாவின் மரணம்; பொலிஸாருக்கு அவகாசம்

எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார் - கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் சிந்துஜா மன்னார் வைத்தியசாலையில் மரணம் அடைந்த நிலையில் குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் மற்றும் பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸாரால் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நம்பப்பட்டு வந்த நிலையில் விசாரணைகள் மந்த கதியில் இடம் பெற்றுள்ளமை நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



## மீண்டும் மக்கள் வழிபாட்டுக்கு...

யாழ். பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு 34 வருடங்களின் பின்னர் மக்கள் வழிபாட்டுக்கு தினந்தோறும் செல்ல வியாழக்கிழமை (20) முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.


ஏற்கெனவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்த ஆலயம் உட்பட 6 ஆலயங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் இன்று முதல் பலாலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு தினந்தோறும் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்துக்கு ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட பாதையூடாக செல்ல முடியும்.

## பெண்ணை தாக்கி கோடிக்கணக்கில் கொள்ளை

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு-காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி பிரதேசத்தில் தனிமையாகத் தங்கியிருந்த சுவிஸ் நாட்டுப் பிரஜையான பெண்ணொருவரை கடுமையாகத் தாக்கிவிட்டு இரண்டு கோடி 40 இலட்சம் ரூபாய் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் 10 கிராம் தங்கம் மாலை 29 ஆயிரம் ரூபாய் இலங்கை நாணயம் என்பன கொள்ளியிடப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு - கல்லடி பேபிசிங்கம் வீதியில் அமைந்துள்ள



வீடு ஒன்றிலிருந்தே கொள்ளையர்கள் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவத்தினமான புதன்கிழமை (20) அதிகாலை 12 மணியளவில் குறித்த வீட்டின் குளியலறை ஜன்னல்

தொடர்ச்சி P2

# முதல் நாள் இன்று

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு நாளில் பல்வேறு முக்கியமான நடவடிக்கைகள் இடம்பெறுவதால் அன்றையநாள் மிகவும் விசேடமானதாகும். பாராளுமன்றம் காலை 10 மணிக்கு கூடும். அதன்பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹன தீரவின் தலைமையில் சபை கூடும், ஜனாதிபதியின் பிரகடனம் வாசிக்கப்படும். அதன்பின்னர், சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

எவராவது உறுப்பினர் ஒருவரின் பெயரை சபாநாயகராகத் தெரிவு செய்யுமாறு உறுப்பினர் ஒருவர் முன்மொழிந்து மற்றொருவர் வழிமொழியவேண்டும். ஒருவரின் பெயர் மட்டுமே பரிந்துரைக்கப்படுமாயின், குறித்த உறுப்பினரின் பெயரை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த உறுப்பினர்கள் இருவரும் கையில் பிடித்துச் சென்று அவரை அக்கிராசனத்தில் அமர்த்துவது வழமையாகப் பின்பற்றப்படும் சம்பிரதாயமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்படுமாயின், வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகரினால் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இதனைப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கொண்டு வைப்பார். இவ்வாறு பதவிச்சத்தியம் செய்துகொண்ட சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்வதற்கு முன்னர் தான் தெரிவுசெய்யப்பட்டமைக்கு நன்றி தெரிவித்து சிறியதொரு உரையாற்றுவதும் சம்பிரதாயமாகும். தெரிவுசெய்யப்பட்ட புதிய சபாநாயகருக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபாநாயகரும் நன்றி தெரிவித்து உரையாற்றுவார். அதன் பின்னர் சபா மண்டபத்திலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்துக்கொள்வர்.

முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்தில் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். இவர்களின் தெரிவுகள் இடம்பெறும்போது சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அக்கிராசனத்தில் இருப்பதனால் குறித்த அறிவிப்பு மற்றும் வாக்கெடுப்பு போன்றன சபாநாயகரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்படும் நாள் பெரும்பாலும் அடுத்த பாராளுமன்ற அமர்வு நாளாகவிருக்கும். முதல் நாளின் பிரதான பணிகள் முடிவுக்கு வந்ததும் தற்காலிகமாகச் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடும்போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பாராளுமன்றத்திற்குத் தலைமை தாங்கி கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்துவார்.

## அரிசி இறக்குமதி

பூர்த்தி செய்யும் வகையில், இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரிசி நெருக்கடி அதிகரிக்கும் பட்சத்தில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் விவசாய அமைச்சர் கே.டி.லாலாகாந்த குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டுக்குத் தேவையான அளவு அரிசி நாட்டிற்குள்ளேயே இருப்பதாகவும், அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்துள்ளார்.

## வர்த்தமானியை இரத்து செய்ய முடியாது

“தேசியப் பட்டியலில் உள்வாங்கவேண்டியவர்களின் பெயர்களைக் கட்சியின் செயலாளர் உத்தியோகப்பூர்வமாகக் கையளித்தவுடன், ஆணைக்குழு அதனை உத்தியோகப்பூர்வமாகக் கருதி அதன்படி செயற்படுகிறது” என்று அவர் விளக்கியுள்ளார். கட்சியின் உள்விவகாரங்களில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்ய முடியாது எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

தேசியப் பட்டியலில் ரவி கருணாநாயக்க எம்.பியாக நியமனம் செய்யப்பட்டமை தொடர்பில் தேசிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் ஷியாமலா பெரேரா தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். எனினும், இந்த நியமனம் ஒருமனதாக எடுக்கப்படாததால் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

## ஹரினுக்கு பிணை

அவர் பாராளுமன்ற தேர்தலில் பதுளை மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் கீழ் 10ஆம் இலக்கத்தில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவை பதுளை நீதவான் நுஜித் டி சில்வா தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கை அடுத்த ஆண்டு மார்ச் 20ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் புதன்கிழமை (20) காலை கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில்,

2024 பொதுத்தேர்தலின் போது தேர்தல் சட்டங்களை மீறி பிரச்சாரத்தில் ஈடுபட்ட தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களிற்கு எதிராக ஏன் சட்டநடவடிக்கைகளை எடுக்கவில்லை.

தேர்தல் பிரசாரத்தின் போது, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் சிவப்பு நிற ரீசேர்ட் அணிந்திருப்பதை காண்பித்த ஹரீன்பெர்ணான்டோ தான் அணிந்திருந்த டீசேர்ட்டில் எரிவாயு சிலிண்டர் படம் இல்லை, பத்தாம் இலக்கம் எனது தேர்தல் போட்டி தொடர்பானதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

பழைய அரசியல் வழிமுறைகளை புதிய அரசாங்கமும் பின்பற்றுகின்றது,தனது விடயத்தில் அதிகாரிகள் புதிய சட்டங்களை பின்பற்றுகின்றனர் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

## சிந்துஜாவின் மரணம்; பொலிஸாருக்கு அவகாசம்

சிந்துஜாவின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (19) அழைக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்பாக தான் குறித்த வழக்கு மன்னார் பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மன்னார் குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர்.

இதுவரை காலமும் மன்னார் மடு பொலிஸார், குறித்த வழக்கு விசாரணையை B வழக்காகப் பதிவு செய்யாது சாதாரண வழக்காகப் பதிவு செய்து விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பெண் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி டெனிஸ்வரன் மற்றும் சர்மிலன் டயசின் கோரிக்கையை ஏற்றுக் குறித்த வழக்கு தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்தி இரண்டு வாரக் காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதே நேரம் வழக்கை B அறிக்கையாகத் தாக்கல் செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு மேலதிக விசாரணைக்காக டிசெம்பர் மாதம் 3 திகதி தவணை இடப்பட்டுள்ளது.

## பெண்ணை தாக்கி கோடிக்கணக்கில் கொள்ளை

கதவை உடைத்து திருடர்கள் உள்ளே நுழைந்து அலுமாரியை உடைத்து அலுமாரியில் இருந்த 72 ஆயிரம் ஸ்விஸ் பிராங்.(இலங்கை நாணயம் எப்படி இரண்டு கோடி 40 இலட்சம்) மற்றும் ஒரு பவுண் தங்கம், 29 ஆயிரம் ரூபாய் இலங்கை நாணயம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் .

குறித்த வீட்டில் தனிமையாகத் தங்கி இருந்த 62 வயதுடைய பெண்மணியைக் கடுமையாகத் தாக்கி விட்டு மேற்படி கொள்ளை சம்பவத்தில் கொள்ளையர்கள் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

கணவரும் மகளும் ஸ்விஸ் நாட்டில் தங்கி இருக்கின்ற நிலையில் குறித்த பெண்மணி ஸ்விஸ் நாட்டுப் பிரஜையாக இருந்த போதிலும் தனது வீட்டைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்து தனது வீட்டில் தங்கி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சுவிஸ் நாட்டுக்குச் சென்ற குறித்த தம்பதியர் கணவன் பொறியியலாளராகவும் மகள் விஞ்ஞானியாகவும் சுவிஸ் நாட்டில் பணியாற்றுகின்ற வேளை குறித்த பெண்மணி சுவிஸ் நாட்டில் தாதியாக பணிபுரிந்து விட்டு ஓய்வு பெற்றுள்ள நிலையில் இலங்கைக்குத் திரும்பி தற்காலிகமாகத் தங்கி இருந்த நிலையிலேயே குறித்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது .

ஸ்தலத்தலத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் மற்றும் தடயவியல் சொகோ பொலிஸ் பிரிவினர் மோப்ப நாய்கள் சகிதம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

62 வயதுடைய சுப்பையா பிள்ளை கோணேஸ்வரி என்கின்ற பெண்ணின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான தீவிர விசாரணைகள் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ எம் எஸ் ஏ.றஹீம் தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

## ரவி மீது கூட்டணி கட்சிகள் அதிருப்தி



புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதற்காக கிடைக்கப்பெற்ற இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒன்றிற்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் முன் மொழியப்பட்டது.

ரவி கருணாநாயக்க தாமாகவே இவ்வாறு தனது பெயரை முன்மொழிந்து கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கூட்டணியில் அங்கம் வகித்த ஏனைய கட்சிகள் ரவி கருணாநாயக்கவின் செயற்பாடு குறித்து கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி, மகஜன எக்சத்பெரமுன, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பிளவடைந்த குழு என்பன கூட்டாக இணைந்து கடந்த பொது தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதே சின்னத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு இருந்தார். பொதுத் தேர்தலுக்காக புதிய ஜனநாயக முன்னணி அன்னப்பட்சி சின்னத்தை மாற்றி எரிவாயு சிலிண்டர் சின்னத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் மீது தனது செல்வாக்கை பயன்படுத்தி ரவி கருணா நாயக்க, தேசிய பட்டியலுக்கு தனது பெயரை இட்டுக் கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாக இந்த ஆசனத்தை வழங்குவதில் பிரச்சினை இல்லை என்ற போதிலும் இந்த ஆசனம் வழங்குவது தொடர்பில் அனைத்து கட்சிகளினதும் கருத்துக்களை கேட்டறிந்திருக்க வேண்டுமென கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இதேவேளை, இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களில் ஒரு ஆசனத்தை நிரப்புவது தொடர்பில் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## மண்மேடு விழுந்ததில்...

மண்மேடு வீடு புதன்கிழமை (20) அதிகாலை 4.30 மணியளவில் இடிந்து வீழ்ந்துள்ளதுடன், வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் வீட்டின் மண்ணுக்கும் சுவர்களுக்கும் இடையில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## CIDயில் ஸ்ரீரங்கா

முன்னிலையாகியுள்ளார். சுஜீவ சேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைய அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

## 5 மணிநேர வாக்குமூலத்தின் பின் வெளியேறினார் பிள்ளையான்

தயாரித்த விசேட காணொளியொன்றில் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளரான அசாத் மௌலானா என்பவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அதில் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரிகளுக்கும் தொடர்பு இருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், அவர் வெளிப்படுத்திய இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், இன்றையதினம் அங்கு முன்னிலையாகி 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியதையடுத்து, அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

## அழுத்தமில்லாத கல்விக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்



மன அழுத்தமில்லாத கல்விக்காக மாணவர்களின் நம்பகத்தன்மையை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் தனது அமைச்சுப் பதவியை புதன்கிழமை (20) பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, கல்வி போன்றதொரு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். விடயத்தின் ஆழத்தை தான் முழுமையாக புரிந்து கொண்டேன். புதிய அரசின் கொள்கைகளின்படி, கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு, பாடசாலைக் கல்வியானது முறையாகவும் கால ஒழுங்கிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

மேலும், குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

தற்போது கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்த மறுமலர்ச்சி யுகத்திற்கு ஏற்ற பிரஜைளை உருவாக்கக்கூடிய மன அழுத்தமில்லாத கல்விக்காக மாணவர்களின் நம்பகத்தன்மையை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளது.

எவ்வாறாயினும், மக்கள் அனைவரினதும் கணிசமான ஆதரவு அதற்கு அவசியம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். இதேவேளை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளராக கே.எம்.ஜி.எஸ்.என்.களுவெவவும் புதன்கிழமை (20) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

## ரணில் இந்தியாவிற்கு விஜயம்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க இன்று வியாழக்கிழமை (21) இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இந்தியாவின் மத்திய பிரதேசத்தின் இன்டோரில் ஸ்ரீ சத்திய ஸ்ரீவிகாரையின் உயர் கல்வி நிறுவனத்தில் விசேட உரையாற்றவுள்ளார்.

உயர் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்குபற்றலுடன் வெள்ளிக்கிழமை (22) மாலை 6 மணிக்கு இந்த விசேட உரை இடம்பெறவுள்ளது.

ரணில் விக்ரமசிங்க இந்திய விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மீண்டும் நாடு திரும்புவார் என கூறப்படுகின்றது.

# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்துவோம்

மக்கள் எதிர்பார்க்கும் சமூக மாற்றத்தை அடைவதற்காக அரச அதிகாரிகளாகவும் கொள்கை வகுப்பாளர்களாகவும் செயற்படுவோம் என நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒரு பெரிய சமூக மற்றும் மனப்பான்மை மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் புதிய இடத்தை உருவாக்கியுள்ளனர் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பதவியேற்பு நிகழ்வில் செவ்வாய்கிழமை (19) அமைச்சர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், “மக்கள் எதிர்பார்க்கும் சேவையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. ஆனால் கடந்த காலங்களில் அரசாங்க அதிகாரிகளாக இருக்கும் ஒரு சில அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் இந்த இருவர் மீதும் மக்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை. அதனுடன் உள்ள காரணங்கள் மற்றும் பல காரணிகளால், மக்களிடையே ஒரு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதன்படி, மக்கள் புதிய இடத்தை உருவாக்கியுள்ளனர். சமூகத்திலும் வாழ்விலும் ஒரு மாற்றத்தை உருவாக்கவும், இருவரிடமும் அணுகுமுறையில் மாற்றத்தை உருவாக்கவும் மக்களே வாய்ப்பளித்துள்ளனர். தற்போது இந்த வாய்ப்பை சரியாகப் புரிந்துகொண்டு மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை அடைவது அல்லது வழக்கமான பாதையில் செல்வதுதான் இப்போது எமக்கு சவாலாக உள்ளது.



நாங்கள் வழமையான பாதையைத் தெரிவு செய்தால் மக்களின் எதிர்பார்ப்புகளைத் தவறவிட்ட தோல்வியுற்றவர்களாக வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டிவரும். ஆனால், ஒருபுறம், பொதுமக்கள் நமக்காக உருவாக்கிய மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் அந்த இடத்தை நாம் தேர்வு செய்தால், நாம் திரும்பிப் பார்க்கும்போது மக்களின் நம்பிக்கைக்காக ஏதாவது செய்தவர்களாக நம் வாழ்வில் திருப்தி அடையலாம். அது போலவே எங்கள் இருவரையும் பற்றி பொதுமக்களுக்கும் சில யோசனைகள் உள்ளன. நாட்டின் சிறுவர், சிறுமி மற்றும் அனைவரிடமும் இருந்து அன்பையும் மரியாதையையும் பெற்றுள்ளோம். அந்த பணிகளை நிறைவேற்றும் பெரிய பொறுப்பு நம் இருவருக்கும் உள்ளது.

நகர அபிவிருத்தி விடயத்தை எடுத்துக் கொண்டால், அது ஒரு நாட்டில் மக்கள் வாழும் முறையைப் பிரதிபலிக்கும் ஒரு துறையாகும். அதுபோல வீடமைப்புத் துறையை எடுத்துக் கொண்டால், நாட்டில் வாழும் மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள் என்பதை அறியும் துறை அது. இந்தத் துறைகளை உயர்த்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அதற்குத் தேவையான ஆதரவை நீங்கள் அனைவரும் வழங்குவீர்கள் என்று நம்புகிறேன். அங்கு மக்கள் எங்களிடம் அதிகம் எதிர்பார்க்கவில்லை. பொதுச் சேவைகளை வழங்குவதில் அவர்கள் எதிர்பார்க்கும் முக்கிய விஷயங்களில் ஒன்று, சேவைகள் திட்டத்துடன் வழங்கப்படுகிறதா என்பதுதான். அதனுடன், அந்த சேவையை வழங்க அவர்கள் எவ்வளவு திறமையாக வேலை செய்கிறார்கள். அதேபோன்று நாங்கள் சேவை வழங்குவது எந்த அளவிற்குத் தூய்மையானது. இந்த சேவையை நாங்கள் நிதிப் பக்கத்தில் மற்றும் நட்பு மற்றும் பிற உறவு முறைகள் இல்லாமல் வழங்குகிறோமா? அது போல, எங்கள் சேவையை நாங்கள் எவ்வளவு திறம்படச் செய்கிறோம் என்பதை மக்கள் எங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் இருவரும் பணியாற்றும்போது, முடிவுகளின் மேலாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் என்ற வகையில் பொதுச் சேவையின் தொழில்முறை பெருமைக்கு நாங்கள் தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதிசெய்கிறோம். அந்த உறுதியுடன், மக்கள் பாடுபடும் சமூக மாற்றத்தை உருவாக்க அரசு அதிகாரிகளாகவும், கொள்கை வகுப்பாளர்களாகவும் இணைந்து செயல்பட நாங்கள் பாடுபடுவோம். அதற்காக அனைவரின் அதிகபட்ச ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்” என்றார்.






## மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு...


நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த மருதமுனை மஸ்ஜிதுந் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றுவரும் பாரிய அபிவிருத்திப் பணிகளில் ஓர் அங்கமாக மிக நீண்ட நாள் தேவையாக உணரப்பட்டுவந்த ஹவ்ளூ மற்றும் நவீன கழிவறைத் தொகுதியை மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கும் நிகழ்வு இஷாத் தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளர் எம்.ஐ.எம் முகர்ரப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பள்ளிவாசலின் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் ஏ.ஆர்.எம் ஜரீர் (பஹ்மி) அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட அழைப்பாளராகக் கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் அதிபர் சங்கைக்குரிய ஆலிம் அஷ்ஷெய்க் அஷ்ரப் (ஷர்கி) அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு பயான் மற்றும் துஆப் பிரார்த்தனையையும் மேற்கொண்டார்கள்.









## தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

# “இன ரீதியானது அல்ல”



தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் இலங்கையர்களின் அரசாங்கம் என்றும் சிங்களவர்கள், முஸ்லிம்கள் அல்லது தமிழர்களின் அரசாங்கம் அல்ல என அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளித்து கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இது நியாயமற்ற விமர்சனம் என்றும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த மக்கள் ஆணையை அவமதிக்கும் செயலாகும் என்றும் கூறினார்.

76 ஆண்டுகளில் அனைத்து சமூகங்களும் தங்களது மத, கலாசார வேறுபாடுகளை மறந்து ஒரே நாடாக வாக்களித்து பெரும்பான்மை ஆட்சியைத் தேர்ந்தெடுப்பது இதுவே முதல் முறை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தவொரு சமூகத்தையும் அவர்களின் மத அல்லது கலாச்சார நடைமுறைகளின் அடிப்படையில் ஒருபோதும் பாகுபாடு காட்டாது என்று வலியுறுத்திய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, அது தமது அரசாங்கத்தின் புத்தகங்களிலும் இல்லை என்றும் கூறினார்.

அமைச்சரவையில் முஸ்லிம் எம்.பிக்கள் இல்லாதது தொடர்பான விமர்சனங்கள் தொடர்பில் அமைச்சர் ரத்நாயக்க கூறுகையில், பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

“கல்முனை, சம்மாந்துறை, வட மாகாணம் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் நாங்கள் வெற்றி பெற்றோம். முதல் தடவையாக மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

கம்பஹா மாவட்டத்திலும் இதே நிலைதான். கண்டி மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இதற்கு முன்னர் ஒருபோதும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினருக்கு வாக்களிக்காத மாவட்டங்களில் இருந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

திகாமடுல்ல, சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய தொகுதிகளில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்” என அவர் தெளிவுபடுத்தினார்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அத்தகைய இன அல்லது சமூகப் பாகுபாடுகளை எந்த வகையிலும் ஒப்புக் கொள்ளாது என்று அவர் வலியுறுத்தினார்.

# கடற்கரைத் திட்டத்தில் தெரிவு



■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

பாசிக்குடா ‘புளு பிளக் பீச்’ நீலக் கொடி கடற்கரை வேலைத் திட்டம் தொடர்பான முகாமைத்துவ கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேக்கா தலைமையில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் துறைசார்ந்த அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பழைய மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்றது.

பாசிக்குடா கடற்கரையை ‘புளு பிளேக் பீச்’ (Blue Flag Beach) ஆக தரமுயர்த்தும் வேலைத்திட்டம் தொடர்பாக சுற்றுலாத்துறை அமைச்சின் அனுசரணையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்திற்காகக் கிழக்கு மாகாணத்தில் அறுகம்பே கடற்கரையும் பாசிக்குடா கடற்கரையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இக் கலந்துரையாடலில் கடல் சூழல் சார் பாதுகாப்பு அதிகார சபை (Marine Environment Protection Authority) யின் மாவட்ட அதிகாரி ஆசிபா அப்துல் றசூல் பாசிக்குடா கடற்கரையை இவ்வாறு ‘புளு பிளக் பீச்’ (Blue Flag Beach) ஆக தரமுயர்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினார்.

‘புளு பிளேக் பீச்’ (Blue Flag Beach) தரச்சான்றிதழ் டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள சுற்றாடல் கல்விக்கான மன்றம் (FEE) எனும் சர்வதேச நிறுவனத்தினால் சுற்றாடல் கல்வி மற்றும் தகவல், தரமான நீர், சுற்றாடல் முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் சேவை ஆகிய பிரதான நான்கு காரணிகளுடன் காணப்படும் கடற்கரைகளுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்காக 33 அளவு கோல்கள் உள்ளன. இதில் 23 அளவு கோல்கள் இது வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கடற்கரையில் தகவல் நிலையம் அமைத்தல், கடற்கரைப் பயனாளிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், கடற்கரை நீரின் தரம் தொடர்பாக டிஜிட்டல் அறிவித்தல் பலகை அமைத்தல், மலசலக்கூடம் அமைத்தல், உடை மாற்றும் பகுதியை புனர் நிர்மாணம் செய்தல், உடமைகளைப் பாதுகாக்கப் பாதுகாப்புப் பெட்டகம் அமைத்தல், கழிவகற்றல் சேவைகளைப் பராமரித்தலும் தரமானதாகப் பேணுதலும் மற்றும் மீள் சுழற்சிக் கழிவுகளைச் சேகரித்தலும் அதனை ஒப்படைத்தலும் , போன்ற செயற்பாடுகளைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கல்குடா பிரதேச சபை ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், கடல் சூழல் சார் பாதுகாப்பு அதிகார சபையின் கிழக்கு பிராந்திய உதவி முகாமையாளர் ரீ.சிறிபதி, சுற்றுலாத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமை காரியாலய அதிகாரிகள், மாவட்டச் செயலக பிரதேச செயலக திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# தாய், சேய் மரணம்; பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.ஆர்.லெம்பேட்



மன்னார் பொது வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டு மரணமடைந்த இளம் தாய் மற்றும் சேயின் சடலங்கள் மேலதிக பிரேதப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செவ்வாய்க்கிழமை(19) இரவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் தாய் வேணுஜா என அழைக்கப்படும் ஜெகன் ராஜசிறி பிரசவத்திற்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சையின் போது தாயும் சேயும் மரணமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் உறவினர்கள், பெற்றோர்கள் உட்பட பொதுமக்கள் ஒன்றிணைந்து மகப்பேற்று விடுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் வைத்தியசாலையில் பதட்டமான நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் நீதவான் இறந்த தாய் மற்றும் சேயின் சடலங்களை பிராதே பரிசோதனைக்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் நீதவானின் உத்தரவுக்கமைய சடலங்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# புத்தகப் பைகள் மற்றும் பாதணிகள் வழங்கி வைப்பு

■ ஏ.எச்.ஹஸ்பர்

தோழர் பத்மநாபரின் பிறந்த தினத்தைத் தோழமை தினமாக நினைவு கூர்ந்து திருகோணமலை ஸ்ரீ ராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்குப் புத்தகப் பைகளையும் பாதணிகளையும் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(19) இடம்பெற்றுள்ளது.



# ஜனாதிபதியின் இணைந்து செயலாற்றுவதற்கான இணக்கம் வரவேற்கத்தக்கது

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட இணக்கபாட்டை தாமும் பின்பற்றி இயங்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

மூன்றாம் கட்ட மீளாய்வுகளை மேற்கொள்வதற்காக நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொண்ட போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, தற்போது நடைமுறையிலுள்ள உடன்படிக்கையை மாற்றமாகாமல், அதனை நிறைவேற்றுவதில் ஏற்கெனவே உடன்பட்ட சில விடயங்களில் மாத்திரம் மாற்றங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார சிக்கல்களில் கவனம் செலுத்தி, பொருளாதார மீட்சி திட்டத்தில் ஒரு சமநிலையைப் பேணுவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் நிதியத்தின் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கோரியிருந்தார்.

நாட்டில் அரசியல் உறுதித் தன்மையை ஏற்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஏற்கனவே இலங்கையிடம் கோரியிருந்தது. அதற்கமைய அண்மையில் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் மக்கள் தெளிவான அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். உறுதியான அரசாங்கம் அமைந்துள்ள நிலையில், மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது.

தமது தேர்தல் பிரசாரங்களின் போதும், நடைமுறையிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையைத் தாம் மாற்றியமைப்போம் என தேசிய மக்கள் சக்தியினர் வாக்குறுதியளித்திருந்தனர். அதன் பிரகாரம், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சில கொள்கைகளில் தளர்வுகளை ஏற்படுத்த புதிய ஜனாதிபதி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இன்னும் தெளிவான பதில் ஒன்று கிடைக்காத நிலையில், 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அக்குழு, முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் தமது அவதானிப்புகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் அறிக்கை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசிய பொருட்களின் மீது வெற் வரி விதிக்கப்பட்டுள்ளமை, உழைக்கும் போது செலுத்தும் வரி வரம்பு மாதமொன்றுக்கு ரூ.100,000 ஆக அமைந்துள்ளமை போன்றன அடங்கலாக சில விடயங்களில் தளர்வுகளை ஏற்படுத்துவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2025ஆம் ஆண்டின் நிதி இலக்குகளை இலங்கை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது தொடர்பிலும், அரசாங்கத்தின் வருமானத்தைத் தொடர்ந்தும் உறுதி செய்வது எவ்வாறு, மேற்படி வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தால், அவற்றை ஈடு செய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள மாற்று வருமான மீட்டும் செயற்பாடுகள் என்பன தொடர்பிலும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், நாட்டின் நலனுக்காகத் தொடர்ந்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயலாற்ற ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மன வலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத் தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெருந்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல; தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மேலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## வரலாற்று சாதனை படைத்த

# 10ஆவது பாராளுமன்ற தேர்தல்

**முருகானந்தம் தவம்**

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் வரலாற்றுப் பதிவுகள், அதிசயங்கள், ஆச்சரியங்கள், அதிர்ச்சிகள், எதிர்பாராத முடிவுகளைக் கொண்டதாக அமைந்து இலங்கையை ஒரு புதிய திசையை, மாற்றத்தை நோக்கி நகர்த்தியுள்ளன.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்று முடிந்த பாராளுமன்றத்திற்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 141 நேரடி ஆசனங்களையும் 18 தேசியப் பட்டியல் ஆசனங்களையும் மொத்தம் 159 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையுடனான வெற்றியைப் பதிவு செய்துள்ளதன் மூலமே தேர்தலிலும் ஆட்சியிலும் பல்வேறு அதிசயங்கள், அதிர்ச்சிகள் நிறைந்துள்ளன.

இலங்கையின் கடந்த 9 வரையிலான பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது 13 உறுப்பினர்களைத் தாண்டவில்லை.

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என பெண்கள் அமைப்புக்கள் போராடிவந்த நிலையில், அது தொடர்ந்தும் 5 வீதத்திற்குள்ளேயே இருந்தது.

இந்நிலையில், இம்முறை தேர்தலில் போட்டியிட்ட 21 பெண்களும் தேசியப் பட்டியல் மூலம் ஒரு பெண்ணும் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்டு உள்ளதுடன், அவர்களில் இருவர் தமிழர்களாவர்.

இவ்வாறு 22 பெண்கள் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்டு, வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்றத்தில் பெண்களின் வீதம் 10.22 வீதமாக அதிகரித்து அதிசயம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரையில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் வரலாற்றில் சிங்களக் கட்சியொன்று வடக்கின் ஆதிக்கத்தைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே வடக்கு மாகாணத்திலுள்ள 12 பாராளுமன்ற ஆசனங்களில் தனி ஒரு கட்சியாக 5 ஆசனங்களைக் கைப்பற்றி இந்த வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தொகுதியில் உள்ள 6 ஆசனங்களில் 80,830 வாக்குகளைப்பெற்றதன் மூலம் 3 ஆசனங்களையும் வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் உள்ள 6 ஆசனங்களில் 39,894 வாக்குகளைப் பெற்றதன் மூலம் 2 ஆசனங்களையும் என தேசிய மக்கள் சக்தி 5 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அதேவேளை, நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 21 தேர்தல் மாவட்டங்களைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றி ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதேவேளை, தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடித்த ஒரே மாவட்டம் என மட்டக்களப்பு அதிசயம் நிகழ்த்தியுள்ளது.

அதேபோன்றே, பிரதமராக ஒரு பெண் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தேசியப் பட்டியல் ஊடாக பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஒருவர் எம்.பியாக நியமிக்கப்பட்ட ஆச்சரியமும் 19 வைத்தியர்கள், பல கலாநிதிகள், பட்டதாரிகள் எம்.பிக்களாக தெரிவான அதிசயம் நிறைந்த தேர்தலாகவும் இது அமைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, இதுவரையான அரசுகளில் ஆகக் குறைந்த அமைச்சர்களாக 21 அமைச்சர்களைக் கொண்ட அரசொன்றை உருவாக்கிய அதிசயம் நிறைந்த தேர்தலாகவும் இந்த தேர்தல் பதிவாகின்றது.

இலங்கையின் 9ஆவது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த 15 சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 176 சிங்கள எம்.பிக்களும் 21 முஸ்லிம் எம்.பிக்களும் 19 தமிழ் எம்.பிக்களும் 9 மலையக தமிழ் எம்.பிக்களுமாக 225 எம்.பிக்கள் இருந்தனர்.

தற்போது, 10ஆவது பாராளுமன்றத்தில் 13 சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 181 சிங்கள எம்.பி.க்களும் 20 தமிழ் எம்.பிக்களும் 16 முஸ்லிம் எம்.பிக்களும், 8 மலையக தமிழ் எம்.பிக்களும் இடம்பிடித்துள்ளனர்.

கடந்த முறையை விட முஸ்லிம் எம்.பிக்களின் எண்ணிக்கை 5 ஆலும், மலையக தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை 1 ஆலும் குறைவடைந்துள்ள நிலையில், தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை 1 ஆல் அதிகரித்துள்ளது.

அதேவேளை, இலங்கை அமைச்சரவையில் முஸ்லிம்கள் இடம்பெறாத முதல் அமைச்சரவை என்ற அதிர்ச்சியான பதிவும் இடம்பெற்றுள்ளது தேசிய மக்கள் சக்தி அரசில் அமைந்துள்ள அமைச்சரவையில் எந்தவொரு தமிழ், முஸ்லிம் பிரதிநிதியும் இடம்பெறாதது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இரு மலையக தமிழர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளது ஆறுதலையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய 150 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அரசியலிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் 92 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற நிலையில், 58 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 77 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்த நிலையில், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் இத்தொகை 94 ஆக அதிகரித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்திப் போட்டியிட்ட தமிழ் கட்சிகள் தமது வாக்கு வங்கிகளில் பெரும் சரிவைச் சந்தித்து அதிர்ச்சியை ஏற்படுத்தின.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 3,27,168 வாக்குகளைப் பெற்றிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, இம்முறை 69,355 வாக்குகளை இழந்து, 257,813 வாக்குகளையே பெற்றுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 67,766 வாக்குகளைப் பெற்றிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இம்முறை 27,872 வாக்குகளை இழந்து 39,894 வாக்குகளையே பெற்றுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 61,464 வாக்குகளைப் பெற்றிருந்த ஈ.பி.டி.பி. இம்முறை 32,479 வாக்குகளை இழந்து 28,985 வாக்குகளையே பெற்றுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 67,692 வாக்குகளைப் பெற்றிருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இம்முறை 33,252 வாக்குகளை இழந்து, 34,440 வாக்குகளையே பெற்றுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் 51,301 வாக்குகளைப் பெற்றிருந்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இம்முறை 38,006 வாக்குகளை இழந்து, 13,295 வாக்குகளையே பெற்றுள்ளது.

கடந்த பாராளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அமைச்சராக இராஜாங்க அமைச்சர்களாக, எம்.பிக்களாக இருந்த பலரும் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் படு தோல்வியடைந்துள்ளனர்.

அமைச்சராகவிருந்த ,டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களாகவிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன். அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ், எம்.பிக்களாகவிருந்த சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், மனோ கணேசன், செல்வராசா கஜேந்திரன், வேலுகுமார், கோவிந்தன் கருணாகரம், சித்தார்த்தன், திலீபன், மருதபாண்டி ரமேஸ்வரன், உதயகுமார், கலையரசன் மற்றும் 100க்கு மேற்பட்ட பிரபல சிங்கள, முஸ்லிம் எம்.பிக்களும் தோற்கடிக்கப்பட்டு அதிர்ச்சியளிக்கப்பட்டது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் பெருமளவில் ஆர்வம் காட்டாதது அதிர்ச்சியும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இம்முறை தேர்தலில் வாக்களிக்க 17,140,354 பேர் தகுதிபெற்றிருந்த நிலையில், 11,815,246 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

53,25,108 பேர் வாக்களிக்கவில்லை.

அதேநேரம், வாக்களித்த 11,815,246 பேரின் வாக்குகளில் 6,67,240 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதனால், 11,148,006 வாக்குகள் மட்டுமே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 16,263,885 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றிருந்த நிலையில் 12,343,302 பேர் மட்டுமே வாக்களித்திருந்தனர்.

3,920,583 பேர் வாக்களிக்கவில்லை வாக்களித்த 12,343,302 பேரின் வாக்குகளில் 744,373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டு, 11,598,929 வாக்குகள் மட்டுமே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை விடவும் இம்முறை 1,404,525 பேர் அதிகமாக வாக்களிக்கவில்லை.

இந்த தேர்தலில், 2,220,311 வாக்காளர்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1,470,549 பேர் வாக்களித்த நிலையில் 749,762 பேர் வாக்களிக்காததுடன், 94,489 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

## கடிதங்கள்

### உயிருக்கு பாரிய அச்சுறுத்தல்

மலையகத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் மீதான குளவி கொட்டுதல் நாளாந்தம் அதிகரித்து வருவதால் தோட்டத் தொழிலாளர்களின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, வடகொடை வடமத்திய கும்புர தோட்டத்தில், குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மலையக தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் அதிகளவான குளவி கொட்டும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் தோட்டங்களில் குளவி கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும், பல சந்தர்ப்பங்களில் தோட்டத் தொழிலாளர் பெண்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகி வருவதாகவும் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடர்ந்து குளவி தாக்குதலுக்கு உள்ளாகும் பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு ஆடைகளை வடிவமைத்து வழங்குவதற்கு பொறுப்பான திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்தால் அது அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

– செ.தி.பெருமாள்




# ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’



ம.கலைச்செல்வன்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

சில நேரங்களில் சில மனிதர்கள் நாவலை ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் படித்ததையும், அதை படித்த போது, உருவான சோர்வையும், வெறுப்புணர்வும் மன வலியாகவும் தான் உணர்கின்றேன். மேலும், அதை 1970 பெண்ணின் மனச் சித்திரமாகவே வாசித்தேன். கால மாற்றத்தில் கங்காவின் தத்தளிப்புகள் பெருமளவுக்குக் காலாவதியாகி விட்டன என்று தோன்றியது.

நவீனப் பெண்ணுக்கு இருக்கும் உளவியல் சிக்கல்கள் எதுவாக இருந்தாலும், சிறுவயதில், தான் கடந்து வந்த ஒரு பாலியல் அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே தன் மொத்த வாழ்க்கையையும் வகுத்துக்கொள்வர்.

அப்படி பார்க்கும் போது, கங்காவின் கதை இன்று நமக்கு ஏன் தேவை என்ற கேள்வி எழுந்தது. அந்த நாவலை கங்காவின் காலத்தின் பதிவாகவே வாசித்தேன். அதனாலேயே அதை ஒரு மைனர் நாவல் என்று நான் அதனை படிக்கும் போதே வரையறுத்துக் கொண்டேன்.

அந்த நாவலை வாசித்து முடித்தபோது, நான் உணர்ந்த வெறுப்பும் கசப்பும் அளவில்லாதது.

நாம் பரிதாபம் கொள்ளுவோரை ஏதோ வகையில் கொஞ்சம் கொடூரமாகவும் வெறுக்கவும் செய்கிறோம். கங்காவின் இரும்புப் பெண் வேடத்துக்கடியில் அவள் ஒரு அய்யோப்பாவம் கேஸ். அவளுடைய அறியாமையும் மடமையும் நம்முடைய பரிதாபத்தையே கோருகின்றது. அதையே நான் வெறுத்தேன் என்று நினைக்கிறேன்.

“அடியேய் கங்கா, உனக்கு முதுகுல இருக்குறது எலும்புத் தண்டா சப்பாத்தி மாவா?” என்று திட்டியபடி தான் அந்த நாவலை வாசித்து முடித்தேன். முடிவில் அந்த புத்தகத்தை அறையின் மறுபக்கம் ஓங்கி எறிந்த ஞாபகம். அவ்வளவு வெறுப்பு, கங்கா மேல், அந்த ஆசிரியர் மேல், அச்சூழல் மேல். ஒரு காலகட்டத்தின் சுழற்சியில் மாட்டிக்கொண்ட பேதைப் பெண்ணின் கதை என்று அந்த நாவலைக் கடந்து வந்து விட்டேன்.

பெண் தனக்குத்தானே இழைத்துக்கொண்ட அநீதியின் சித்திரமாகவும், அதைத்தூண்டிய சமூக மன நிலையின் சித்திரமாக அதை வாசித்தேனே தவிர, வாழ்க்கையின் சாளரத்தின் வழி அதை அணுகவில்லை.

மேலும் சொல்லவேண்டும் என்றால், அது தூண்டிய கசப்புணர்வும் வெறுப்புணர்வும் உணர்ச்சிகளாக உட்கொண்டேனே தவிர, அந்த உணர்ச்சித் தூண்டுதலுக்கு பின்னால் இருக்கும் உளவியலை அது கதை மாந்தரின் உளவியலோ, சமூகத்தின் உளவியலோ, ஏன், என்னுடைய உளவியலோ அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

இன்று சி.நே.சி.ம. நாவலைப் பரிசீலிக்கும்போது, அந்த நாவலின் கட்டமைப்பும் கதைமாந்தரும் வாசகர் மனதில் உருவாக்கும் கசப்புணர்வும் வெறுப்புணர்வும் இரக்கமும், அதன் உளவியலும், இந்த நாவலை அணுகி வாசிப்பதில் முக்கியமான அம்சங்களாகப் படுகின்றன. உணர்வு -ரஸம் வழியாக இந்த நாவலை அணுகினால் ஒரு திறப்பு கிடைக்கலாம் என்று தோன்றுகிறது. ஒரு படி மேலே சென்றால், கங்காவின் சுய பரிதாப உணர்வும் வாசகர் வெறுக்கக் காரணம் என்று நாம் நமக்குள்ளேயும் அதே இயலாமையை, பலபலவீனத்தை, அமைதியின்மையை, வெறுமையை ஏதோ வகையில் உணர்வதால் கூட இருக்கலாம்.

சி.நே.சி.ம. நாவலை, முதன்மையாக அடையாளத்தைப் பற்றிய நாவலாக வாசிக்கலாம். கங்காவின் அடையாளப் பிரச்சினை இருத்தலியல் சிக்கல் எல்லாம் இல்லை. தன் சமூகத்தில் அவளுக்கு இடம் இல்லை என்பது தான் அவள் சிக்கல் என்று சொல்லலாம்.

இருத்தலே அவளுக்குப் பிரச்சினை. அசோகவனத்துச் சீதைக்கு அயோத்தியில் என்ன இடம் என்ற கேள்வியிலிருந்து இந்த அடையாளச் சிக்கல் தொடங்குவதாகச் சொல்ல முடியும்.

தன்னுடைய அடையாளத்தைத் தான் கண்டுகொள்ளும் வயதில் உள்ள ஒரு பெண், தனக்கு நிகழும் ஒரு சம்பவத்தினால் தனது மொத்த அடையாளமும் அதைச்சார்த்தே உருவாகக்கூடியவளாகிறாள்.

அந்த பாலியல் அனுபவத்தை அவளே விரும்பி தேர்ந்தெடுத்தாள் என்று நாம் கதையை வாசித்தால், அது ஒரு மனித உயிர் தன் அடையாளத்தைக் கண்டுகொண்ட முதற்க்குறல் தானே? தன் குரலை ஓங்கியதாலேயே, தன் பாலியல் அடையாளத்தை நிறுவியதாலேயே, தண்டிக்கப்படுகிறாள் கங்கா.

அந்த பாலியல் சம்பவத்தின் அடிப்படையில் கங்காவின் மொத்த அடையாளமும் அமைய வேண்டும் என்று அவளுடைய சமூகம் எதிர்பார்க்கிறது. தூண்டுகிறது.

கங்காவும், தன்னை களங்கமுற்றவளாக, வாழ்க்கையின் மகிழ்ச்சிகளுக்கு தகுதியற்றவளாக தன் மனதில் வார்த்துக்கொள்கிறாள். அதைத் தீவிரமாக நம்புகிறாள். இது துயரம் மாபெரும் மானுடத் துயரம் அல்ல, சற்று வெட்கத்தக்க, கீழ்மையான, யாரிடமும் பகிரமுடியாத, பகிர்ந்தாலும் புரியவைக்கமுடியாத, தன்னைத்தானே வெறுக்கும், தன்னை அசிங்கம் என்று நம்பும், கழிப்பறை ஓரத்தில் கிடக்கும் மயிர்ச்சுருள் போன்ற துயரம்.

ஆம், அந்த சூயிங்கம் இந்தத் துயரத்துக்குப் பொருத்தமான குறியீடு. அசை போட்டு அசைபோட்டு ரசமற்ற ஜடமாக தன்னைத்தானே ஆக்கிக்கொண்டதாகத் தன்னை அவள் ஏமாற்றிக் கொள்கிறாள்.

இவள் வாழ்க்கை வீணாகப் போனது. அந்த ‘சூயிங்கம்’ அவள் வாயில் வந்ததனால் அல்ல, அதை வாழ்க்கை முழுவதும் அவள் சப்பிக் கொண்டிருந்ததனால். இதற்கு சமூகக் காரணிகளை முக்கியமாகச சொல்லலாம், நாவலும் பேசுகிறது ஆனால் இதன் மையமாக, ஒரு பெண் தன் அடையாளத்தைத் தானே அழித்துக் கொள்ளும் கதை தான் இது. இது ஒரு வகையான ஆன்மத் தற்கொலை தான்.

இவ்வகையில் கங்கா சீதை முதலிய புராணப் பெண்களிலிருந்து மாறுபடுவதாக எண்ணுகிறேன். சீதையும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவள். ஆனால், எந்த நேரத்திலும் தன் சுயத்தை அழித்துக்கொண்டு அதை ஒரு ஆண் நிரப்ப வேண்டி நின்றவள் அல்ல அவள். மாறாக, கங்கா, தன்னை நிராகரித்த சமூகத்திடமே தன் அடையாளத்தைத் தரக்கோரி வேண்டி நிற்கிறாள். அது கிடைக்கவில்லை என்றதும் உடைந்து நொறுங்குகிறாள்.

கங்கா தனது ஆளுமையை, அடையாளத்தை பாலியல் தொடர்பானதாக ஆக்கிக்கொண்டதை (அல்லது அப்படி ஆக்கிக்கொள்ள வைக்கப்பட்டதை) நாவலில் வாசிக்க முடிகிறது.

பாலியல் ரீதியாகக் களங்கப்பட்டவளாக, அதன் விளைவாகவே, திருமணத்தின் வழியாக கிடைக்கக்கூடிய நேர்மையான பாலியல் மறுக்கப்பட்டவளாக, அதே காரணத்தால் வெங்கு மாமா போன்றவர்கள், அவளிடம் பாலியலை எதிர்பார்க்க, “உனக்குச் சாமர்த்தியம் இருந்தால் உன்னைக் கெடுத்து நிராகரித்தவனையே அடைந்து காட்டுப் பார்ப்போம்” போன்ற பாலியல் சவால்களை எதிர்கொள்பவளாக, அனைத்துக்கும் மேலாக, சாதாரண பாலியல்புகள் கொண்ட சாதாரண பெண்ணாக இருந்தும், அதை ஒவ்வொரு நொடியும் நிராகரிக்க வேண்டிய இடத்தில் இருப்பவளாக, தன்னுடைய மொத்த ஆளுமையையும் கங்கா பாலியலின் வாயிலாகவே கட்டியமைத்துக் கொள்கிறாள். சமூகம் தன்னை அப்படிப் பார்ப்பதைத் தாண்டி, அவளே தன்னை அவ்வாறு காணத் தொடங்குகிறாள். அந்தப் பார்வையின் மூலம் தான் அவள் மொத்தக் கதையையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

இதுவே ஒரு திரித்த பார்வை.

பிரபுவைச் சந்தித்த போது கூட, அவள் அவனுடன் உறவு கொண்டவள், அவனுடைய வைப்பாட்டியாக வேண்டியவள் என்று தான் தன்னை நினைத்துக் கொள்கிறாள்.

எந்த தொழில்முறை பரத்தையிருக்கும் தன்னைப்பற்றி இப்படியொரு திரித்த எண்ணம் உதிக்குமா என்று தெரியவில்லை. இது பாலியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்து குடும்பப் பெண்ணின் சிக்கல். கங்காவின் ஒரு கேள்வி தன்னைச்சீண்ட, உடனே அடுத்தநாளே மண்டையை மழித்து கைம்பெண் கோலம் பூணும் கங்காவின் தாயையும் இதே மனநிலையைத்தான் காண்கிறேன்.

கங்கா தனக்கு இரண்டு இடங்களில் வேறு வகை அடையாளத்தை ஒரு கனவுபோல பொருத்திப் பார்க்கிறாள். தனக்கும் பொருத்தமான வயதில் திருமணம் நடந்திருந்தாலென்ன நடந்திருக்கும்? வசவசன்னு பிள்ளையை பெத்துப் போட்டுருப்பேன் என்கிறாள்.

பிரபுவின் குடும்பத்தைச் சந்திக்கும்போது, அவனுடைய பிள்ளைகளிடம் தாய்மை பாவம் கொள்கிறாள். ஆனால், அதுவும் அவளுக்கும் பிரபுவுக்குமான உறவின் உரிமையில்.

இரண்டுமே ஒரு வித கானல் நீர். முழுமையாக இரண்டு நிலைகளிலும் அவளால் தன்னை பொருத்திப் பார்க்க முடியவில்லை. எந்த நிலையிலேயும் படித்து, வேலைக்குச் செல்லும் பெண்ணாகக்கூடக் கங்கா தனக்கென்று ஒரு ஆளுமை இருப்பதாகவோ அடையாளம் இருப்பதாகவோ உணரவில்லை. அப்படி ஒரு அடையாளம் தனக்கு மறுக்கப்பட்டதாகவோ, தனக்கு அது இல்லை என்றோ, அவள் வருத்தம் கொள்வதாகத் தெரியவில்லை.

பாலசந்தர் படத்து நாயகிகளைப்போல, ஆண், குடும்பம் சார்ந்த அடையாளத்தையே அவள் மதிக்கிறாள், கோருகிறாள். அது அந்த காலகட்டத்தின் மன நிலையாக இருக்கலாம். பெண் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை அன்றைக்கும் இன்றைக்கும் பெண்ணின் சுய அடையாளத்தையும் சுய எழுச்சியையும் மேம்படுத்தியுள்ளதா என்ற கேள்வி எழுகிறது. கங்காவின் சிக்கல்களின், வீழ்ச்சியின் அடிநாதம் இதுவே.

வெங்கு மாமா கங்காவிடம், சாமர்த்தியம் இருந்தால் அவனை போயி பிடிச்சுக்கோ என்று சொல்வதைக் கங்கா ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறாள். அவள் அச்செயலை வெற்றியாக, மீட்சியாகப் பார்க்கிறாள்.


நான் கெட்டுப் போனவளாக இருக்கலாம், ஆனால் என்னைக் கெடுத்தவனுக்கு மட்டுமே உண்மையாக இருக்கும் பத்தினிப்பெண் நான், என்ற அறைகூவல் அது. (இன்று இவ்வரிகளை எழுதவே காமெடியா இருக்கிறது.

ஆனால் கங்காவின் பத்த்னித்தனத்தை பறைசாற்றிப் போனத்தலைமுறை வாசகர்கள் சொல்லிக்கேட்டிருக்கிறே. தன் வாழ்க்கைக்கு ஒரு ஆண்துணையும், தன்னை அடையாளப்படுத்த ஒரு ஆணும் தனக்குக் கிடைத்தால் வெற்றி என்று பிரபுவைத் தேடுகிறாள் கங்கா. அவ்வாறு பிரபுவைச் சந்திக்கும்போது தான் நாம் கதையின் கோணத்தை உணரத் தொடங்குகிறோம்.

பிரபுவின் வாழ்க்கைச் சூழலில் அவன் கங்காவை எதிர்கொள்ளும் முறையும் நமக்குத் தெரிய வருகிறது. அந்த மழை இரவில் அந்த காருக்குள் நடந்தது என்ன? இந்த நாவலுக்குள் பிரபுவின் பிரதி ஒன்றிருக்கிறது என்று நாம் அறியும் கணம் முக்கியமானதாக எனக்குப்படுகிறது.

குந்தி சூரியனை அழைத்ததில் அறியாமை என்ன பகுதி? ஆசை என்ன பகுதி? அகலிகை இந்திரனுடன் கூடியதில் அறியாமை என்ன பகுதி? ஆசை என்ன பகுதி? கங்காவின் அறியாமை மட்டும் அவளை அந்தச் சூழ்நிலையில் தள்ளவில்லை என்று பிரபுவின் தரப்பு உணர்த்துகிறது.

கங்காவும் ஒரு வகையில் இதை உணர்ந்திருக்கிறாள். அதே நேரத்தில், தன் ஆசையை ஒப்புக்கொண்டு வலிய அவள் அவன் வழிக்குப் போகவில்லை என்றும் உணர முடிகிறது.




தன்னளவில் தன்னை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியாமல் தத்தளிக்கிறாள் கங்கா. பிரபு அழைத்ததும் மறுக்கவில்லை. அதே நேரத்தில், தன் சுயத்தை, விருப்பத்தை எதிர்கொள்ள அஞ்சியவளாக, அதை அணுகத்தெரியாமல் வீட்டுக்கு அழுதுகொண்டே ஓடுகிறாள். தன்னை கலங்கப்பட்டவளாக மற்றவர்கள் சொல்வதற்கு முன்னால் அவள் தான் முதலில் நம்பத்தொடங்குகிறாள். இது அவள் வாழ்ந்த காலத்தின் உளவியல் என்று புரிந்துகொள்ளலாம்.

பிரபுவின் பிரதி என்ன? பிரபுவுக்கு அவள் தான் அழைத்ததும் வந்த ஒரு பெண். மறுத்து குரல் உயர்த்தவில்லை. சாலையில் நிற்கும் பெண்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு சம்மதம் கோராமல் அவர்களுடன் உறவு கொள்வது சராசரி ஆண் செய்யும் செயலே அல்ல.

தனிப்பட்ட காழ்ப்புகளால், விரக்திகளால், தோல்வியடைந்து புழுவாய் உழன்ற ஒரு ஆளுமை பிரபு என்று நம்மால் ஊகிக்க முடிகிறது. சமூகத்தில் அவனுக்கு இருக்கும் அந்தஸ்தாலும் பலத்தாலும் தான், விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் இப்படி ஒரு செயலை செய்ய முடிந்தது. தன்னைப்போல, அவளுக்கும் அது ஒரு நாள் நிகழ்வு என்றும், இப்போது யாரையாவது மணம் செய்து கொண்டு நிறைவுடன் வாழ்ந்து கொண்டிருப்பாள் என்றும் நினைக்கிறான்.

தன் செயலின் விளைவுகளை உணர்ந்து மன்னிப்பு கோரினாலும், அவனுக்கு அவளது இரட்டை மன நிலையோ, அவள் சந்தித்த நெருக்கடிகளோ, அதனால் சிதையுண்ட அவளது மணமோ, அவள் தற்போது அவனிடம் எதிர்பார்ப்பதோ, எதையுமே அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அது அவன் மண்டைக்குள் ஏறியதாகவே தெரியவில்லை. அவனைச் சுயநலவாதி என்றும் சொல்லிவிட முடியவில்லை. தன்னை பற்றி மட்டுமே யோசிக்கும் ஒரு வகை வயதான குழந்தையைப்போல இருக்கிறான்.

கங்காவுக்கு நிகழ்ந்ததற்கு உண்மையாகவே வருத்தப்படுகிறான். வாய்வார்த்தையில் பொறுப்பெடுத்துக் கொள்கிறான். ஆனால், அவன் அவளுடன் எல்லாவற்றையும் மறந்து நட்பு பாராட்ட விரும்புகிறான். தான் தொலைத்த இளமையின் நினைவாக, தன் வீட்டுச் சூழலுக்கு ஆறுதலாக அவளுடைய உணர்ச்சிகளையும் நட்பையும் குழந்தையைப்போல் கோருகிறான். அவளுடைய எதிர்பார்ப்புகளே வேறு.

இவ்வளவுதான்: கங்காவின் அடையாளத்தை அவள் அமைத்துக்கொள்ளப் பிரபு அவளுக்குத் தேவைப்படுகிறான். பிரபுவின் அடையாளத்தில் கங்காவுக்கு பங்கே இல்லை.

பிரபுவுக்கு அவளுடைய எதிர்பார்ப்பு புரியும் போது அவன் விலகிவிடுகிறான். இதன் உளவியலை இப்படிப் புரிந்துகொள்ளலாம். தன் மொத்த அடையாளத்தையும் அவன் செய்த ஒரு நயவஞ்சகச் செயலின் அடிப்படையில் அமைத்துக்கொண்ட ஒருத்தியை எப்படி ஏற்றுக்கொள்வது?

ஒவ்வொரு நொடியும் தன்னுடைய கீழ்மையும் குற்றவுணர்வையும் நினைவு படுத்தியபடியே இருக்கும் அல்லவா அவளுடைய இருப்பு?

கங்கா எதிர்பார்ப்பது என்ன? உலகத்தின் முகத்தில் கரியைப் பூசுதல். அதற்குப் பிரபு.

அவன்மூலம் தனக்குக்கிடைக்கும் அடையாளம். தன்னுடைய கதையைச் சீரான, உலகத்தின் போக்கு ஒற்றிக்கொள்ளும்படியான ஒன்றாக, அப்போது அவளால் தனக்குச் சொல்லிக்கொள்ள முடியும். காதல், குடும்பம், உறவு, பாலியல் இவையெல்லாமே அடுத்த படியாகவே என்று தோன்றுகிறது.

இவ்விரு பலவீனமான, உடைந்த மனிதர்களுக்குள் என்ன அணுக்கமான, நிறைவான உறவு சாத்தியம்?

கங்காவின் இறுதி அழுகை, நான் யார் என்ற அழுகை. இருமடங்காக அவள் உணரும் நிராகரிப்பும், கலங்கமும் அவளைத் தன்னையே வெறுக்கச்செய்கிறது. தன்னையே தொலைத்தவள் என்ற சொற்கள் இவளுக்கு எவ்வளவு பொருத்தமாக அமைகின்றன.

இவள் நிலையைக்கண்டு பரிதாபம், இரக்கம் தோன்றுகிறது. கூடவே, அவளது சுயவெறுப்பின் ஒரு பங்கை நாமும் உணர்கிறோம். ஆம், தான் யார் என்று தெரிந்து தெளியாத நிலை, பரிதாப நிலையும். கசப்பும் நிறைந்தது.

இந்த உணர்ச்சியைக் கொண்டு வந்ததே நாவலின் வெற்றி என்று நினைக்கிறேன். தன் சுயத்தை எதன் பொருட்டும், யார் பொருட்டும், ஒரு கண நேரமேனும் தொலைத்துத் தேடியவர்கள் உணரக்கூடியது. கங்காவின் வெறுமையின் துயரம் மனதைக் கனக்கவைக்கிறது. கொஞ்சம் வெறுக்கவும் வைக்கிறது.

கங்காவைப் போலவே வெறுமை நிறைந்து திரிந்த பாத்திரம் என்றால், அது நாஸ்டாஸ்யா பிலிபோவ்னா. அவளும் நயவஞ்சகச் சமூகத்தால் ஏமாற்றப்படுகிறாள்.

ஆனால், மிஷ்கினின் அன்பும் மன்னிப்பும் நிறைந்த கண்கள் மூலமாக நாம் அவளைக் காண்கிறோம் என்பதால் அவள் மீது இரக்கம் நிறைகிறதே ஒழியக் கழிவிரக்கமோ வெறுப்போ வரவில்லை. அதேபோல், அகலிகையின் மீட்சி இராமனின் அன்பில். சீதையின் மீட்சி பூமியைப்போல் ஸ்திரமான அவள் சுயத்தில் இராமன் மீது அவள் கொண்டுள்ள அன்பில்.

ஆனால் கங்காவின் உலகில் இருக்கும் ஆண்களில் மிஷ்கிஙளோ இராமன்களோ இல்லை.

ஒரு வறட்சியான, மதிப்பீடுகளும் அன்பும் அற்ற உலகத்தை ஆசிரியர் வேண்டுமென்றே படைக்கிறார் என்று தோன்றுகிறது. அங்குப் புரட்சி எழுத்தாளரின் குரல் மட்டுமே கலங்கரை விளக்கம் என்று கொள்ளலாம்.

மொத்தத்தில் சி.நே.சி.ம. களின் பேசுபொருளும், மைய்யச் சிக்கலும் அந்த காலத்துக்குறியது தான். அந்த வகையில், இப்போதும் சொல்கிறேன், இது சிறப்பான, க்ளாஸிக் தன்மை கொண்ட முதன்மை நாவல் அல்ல. என் அடுத்த தலைமுறை இதை வாசிப்பார்களா என்று தெரியவில்லை.

இருந்தாலும், ஒரு வரலாற்றுச் சூழலைத் தெரிந்து கொள்வதைத்தாண்டி, இந்த நாவலை ஏன் வாசிக்கலாம் என்று சொல்வேன் என்றால இது மனித அடையாளம் சார்ந்த, பெண் அடையாளம் சார்ந்த படைப்பு. தன் அடையாளத்தை தனக்கு வெளியில் இருக்கும் ஒன்றுடன் இணைக்கையில், அது கவிழும்போது உருவாகும் கசப்பான வெறுமையின் சித்தரிப்பு. பெண் அடையாளத்தைப் பற்றி நம் மரபில் எழுப்பப்படாத கேள்விகளை உடைத்து, பாவனை களற்று முன்வைத்துப் பேசுகிறது.

சமூக காலகட்டம் சார்ந்து, பெண் கல்வி சார்ந்து, பெண்ணின் சுய நோக்கு சார்ந்து விவாதிக்கப்பட வேண்டியது.

பிரபுவின் பிரதி. சுயநலமும், அறியாமையும், மடமையும் நிறைந்த ஆணாகவே பிரபுவின் பாத்திரத்தை நான் வாசித்தேன். ஆம், இவன் பாத்திரத்துக்கும் ஒரு சமூகப் பின்னணி உள்ளதென்றாலும் கங்கா அளவுக்கே அவனும் பலவீனமான, கோழைத் தனமும் கயமையும் நிறைந்த பாத்திரம். பிரபு கங்காவை விட்டு விலகும் உளவியல் முக்கியம்.

கதைப்போக்கும் கதைமாந்தரும் நம்மில் உருவாக்கும் அருவருப்பும் வெறுப்பும் கசப்பும் கழிவிரக்கமும். நான் இந்த நாவலை, முன்பு சொன்னது போல், உணர்ச்சிகளாகவே உள்வாங்கிக் கொண்டேன்.

அது என்னில் செலுத்திய பாதிப்பு இக்கட்டுரையை எழுதும்போது தான் புரிகிறது இந்த நாவலின் நிகழ்வுகளை, மாந்தர்களை, உரையாடல்களை உணர்ச்சி நிலைகளாகவே நினைவில் நிறுத்திக் கொண்டுள்ளேன். அந்த உணர்ச்சியைத் தொட்டே நாவலை மீண்டும் தொகுத்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் இந்த நாவலை எழுதியதில் என்ன ஊகித்தார் என்று தெரியவில்லை, ஆனால், எனக்கு இது எப்படி எளிய, பலவீனமான மனிதர்கள், அசிங்கமான ஒரு சூழலில் மாட்டிக்கொண்டு தங்கள் வாழ்க்கையில் அர்த்தமுள்ள அனைத்தையும் தானாக நிராகரிக்கத் தூண்டப்படுகிறார்கள் என்பதன் சித்திரம்.

கோரமான இறப்புக்கள், சித்திரவதை காட்சிகளைக்கூட வாசித்துவிடலாம். மனித மனம் மகத்தான மனித மனம் தன்னைத்தானே அழித்துக்கொள்வதைத் தாங்க முடியவில்லை.

அதன் கதை தான் இது என்பதனால் வாசிக்கலாம்.

இறுதியாகப் பெண்களின் சுய அடையாளம் பற்றி வந்துள்ள தமிழ் நாவல் வரிசையில் பொருத்தி இதை வாசிக்கலாம்.

ரஷ்யா


அணு ஆயுதங்களை பயன்படுத்த

# புட்டின் அனுமதி

உக்ரைன் மீதான போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த, ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஒப்புதல் அளித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கி 1,000 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது தொடர்பான புதிய கொள்கையில், புட்டின், செவ்வாய்க்கிழமை (19) கையெழுத்திட்டுள்ளார்.

ரஷ்யா மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் இராணுவ உதவி வழங்கி வந்தன. நீண்ட தூரம் சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கி இருந்தது. எனினும், இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.



தற்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில், தாங்கள் வழங்கிய நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தும் பட்சத்தில், ரஷ்யாவுக்கு தீவிர பாதிப்பு ஏற்படும். இந்த சூழலில், உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளது.

இதற்கேற்ப தன் அணு ஆயுதக் கொள்கையில் ரஷ்யா மாற்றம் கொண்டு வந்துள்ளது. இதன்படி, பாலிஸ்டிக் ஏவுகணை உட்பட நவீன ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ரஷ்யா மீது வான்வழித் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பதிலுக்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

இந்த அறிவிப்பு காரணமாக, ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரமடையும் சூழல் உருவாகியுள்ளது.

காசா

பணய கைதிகளை கண்டுபிடிப்போருக்கு


## சன்மானம் வழங்குவதாக இஸ்ரேல் அறிவிப்பு

காசா முனையில், பணய கைதிகளாக உள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு தலா 13 கோடி ரூபாய் (இலங்கை பெறுமதி) சன்மானம் வழங்கப்படும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் நடத்திவரும் தாக்குதலில், இஸ்ரேலில் இருந்து 251 பேரைப் பணய கைதிகளாகக் காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல், 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது. அதேபோல், ஹமாஸ் ஆயுதக் குழுவினர்களால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதில், பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது.



அமெரிக்கா


ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்களை நாடு கடத்த

## அமெரிக்காவில் தேசிய அவசரநிலை பிரகடனம்

எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தேசிய அவசரநிலை பிரகடனம் செய்து, ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்களை நாடு கடத்த திட்டமிட்டுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப், தனது தேர்தல் பிரசாரத்தின் போது, சட்டவிரோத குடியேற்றம் குறித்து அதிகம் பேசினார். அதாவது, "தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் ஆட்சியில் சட்ட விரோதமாக அமெரிக்க எல்லைக்குள் புகுந்தவர்களை நாடு கடத்தி, மெக்சிகோவுடனான எல்லையை உறுதி செய்து நாட்டை பாதுகாப்பேன்" என்று ட்ரம்ப் உறுதி அளித்திருந்தார். இந்த நிலையில், "டிரம்ப் தலைமையிலான ஆட்சியில், தேசிய அவசரநிலை கொண்டு வரப்பட்டு, இராணுவத்தைப் பயன்படுத்தி பெருமளவிலான புலம்பெயர்ந்தவர்களை நாடு கடத்தவுள்ளார்" என்று 'ட்ரூத்' சமூக ஊடகத்தில் ஒருவர் பதிவிட்டிருந்தார்.

அந்த பதிவுக்கு பதிலளித்த டிரம்ப், "இது உண்மைதான்" என்றார்.



தமிழகம்

கள்ளக்குறிச்சி விஷச்சாரய வழக்கு:

## தீர்ப்பு வெளியானது



தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய கள்ளக்குறிச்சி விஷச்சாரய வழக்கின் தீர்ப்பை, புதன்கிழமை (20), உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் பகுதியில், மெத்தனால் கலந்த விஷச்சாராயம் குடித்து 70க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்குத் தமிழக அரசு உத்தரவிட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலைப்பகுதியில் தான் சாராயம் தயாரித்து, விற்பனை செய்யப்படுவதாகவும், இதில் பலருக்குத் தொடர்பு உள்ளதாகவும், எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இது தொடர்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் பா.ம.க., அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகளை நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பி.பி.பாலாஜி ஆகியோர் கொண்ட சிறப்பு பெஞ்ச் விசாரித்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கின் தீர்ப்பைத் திகதியைக் குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

இந்தநிலையில் இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று (20) காலை 10.30 மணிக்கு நீதிபதிகள் பிறப்பித்தனர்.

இதற்கமைய, கள்ளக்குறிச்சி விஷசாராய மரண வழக்கு விசாரணையை சி.பி.ஐக்கு மாற்றம் செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இவ்வழக்கில் தமிழக பொலிஸார் எவரும் தலையிடக்கூடாது எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸ் அதிகாரிகள் மீது எடுத்த நடவடிக்கையைத் திரும்பப் பெற்றது தவறு என்றும் நீதிபதிகள் கூறினர்.


அத்துடன், பொலிஸாருக்கு தெரியாமல் இந்த சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றும் தவறிழைத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து வழக்கின் அனைத்து ஆவணங்களையும் சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கத் தமிழக பொலிஸாருக்கு, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஆந்திரா

மாணவிகளின் தலைமுடியை வெட்டிய

## அதிபர் பணியிடை நீக்கம்



ஆந்திராவின் அல்லூரி சீதாராமா ராஜூ மாவட்டம், ஜி மதுலா பகுதியில், மாணவிகளின் தலைமுடியை வெட்டிய அதிபர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

'கஸ்தூர்பா காந்தி' என்ற பெயரில் அரசு பெண்கள் பாடசாலையில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது, பாடசாலைக்குத் தாமதமாக வந்த 18 மாணவிகளின் தலைமுடியைப் பாடசாலை அதிபர் சாய் பிரசன்னா என்பவர் கத்தரி கொண்டு வெட்டியுள்ளார்.

இது தொடர்பான காணொளி காட்சி வைரலான நிலையில், கல்வித்துறை அதிகாரி நேரடியாகச் சென்று விசாரணை நடத்தினார்.

பாதிக்கப்பட்ட மாணவிகளிடம் நடத்திய தீவிர விசாரணையில், தலைமுடியைக் கத்தரித்தது உண்மை என்பது தெரியவந்தது. இதனையடுத்து அதிபர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

ஆந்திரா

திருப்பதி கோவிலில் பிற மத

## ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு

திருப்பதி கோவிலில் பணியாற்றும் இந்துக்கள் அல்லாத பிற மத ஊழியர்களைப் பணி நீக்கம் செய்வதற்கு, தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோவில் நிர்வாகத்தை, திருப்பதி தேவஸ்தானம் அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது. ஆந்திராவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையடுத்து, திருப்பதி தேவஸ்தான அறங்காவல் குழு நிர்வாகிகள் புதிதாக நியமிக்கப்பட்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களின் முதல் கூட்டம், தலைவர் பி.ஆர்.நாயுடு தலைமையில், திங்கட்கிழமை (18) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், திருப்பதி கோவிலில் பணியாற்றும் இந்துக்கள் அல்லாத பிற மத ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யத் தேவஸ்தானம் முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியானது.

சகலதுறைவீரர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய பாண்டியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் ஹர்திக் பாண்டியா முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கெதிரான இறுதி இரண்டு போட்டிகளிலும் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, 18 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள்:
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங் ஐரீ,
3.லியம் லிவிங்ஸ்டோன், 4.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்,
5.வனிது ஹசரங்க.

இதேவேளை, மேற்குறிப்பிட்ட போட்டிகளில் 227 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் திலக் வர்மா, துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் 72ஆம் இடத்திலிருந்து 69 இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ட்ரெவிஸ் ஹெட்,
2.பில் ஸோல்ட்,
3.திலக் வர்மா,
4.சூரியகுமார் யாதவ்,
5.பாபர் அஸாம்,
6.மொஹமட் றிஸ்வான்,
7.ஜொஸ் பட்லர்,
8.யஷஸ்வி ஜைஸ்வால்,
9.பதும் நிஸங்க,
10.ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்.



இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்று போட்டிகளில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் அடம் ஸாம்பா, பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவுக்கெதிரான மேற்குறித்த போட்டிகளில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் அர்ஷ்டீப் சிங், 12ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்கள்:
1.அடில் ரஷீட், 2.வனிது ஹசரங்க,
3.அடம் ஸாம்பா, 4.அகீல் ஹொஸைன்,
5.மகேஷ் தீக்‌ஷன, 6.குடகேஷ் மோட்டி,
7.ரஷீட் கான், 8.ரவி பிஷ்னோய்,
9.அர்ஷ்டீப் சிங், 10.பஸல்ஹக் பரூக்கி.

இதுதவிர ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் நியூசிலாந்துக்கெதிரான முதலிரண்டு போட்டிகளில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இலங்கையின் மகேஷ் தீக்‌ஷன, 12ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்கள்:
1.ஷகீன் ஷா அஃப்ரிடி,
2.ரஷீட் கான்,
3.கேஷவ் மஹராஜ்
4.குல்தீப் யாதவ்,
5.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்,
6.மகேஷ் தீக்‌ஷன,
7.ஜஸ்பிரிட் பும்ரா
8.மொஹமட் சிராஜ்,
9.அடம் ஸாம்பா,
10.ஜொஷ் ஹேசில்வூட்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்கள்:
1.பாபர் அஸாம்,
2.றோஹித் ஷர்மா,
3.ஷுப்மன் கில்
4.விராட் கோலி,
5.ஹரி டெக்டர்,
6.டரைல் மிற்செல்,
7.ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்,
8.பதும் நிஸங்க, 9.ஷே ஹோப்,
10.பக்கர் ஸமன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.மொஹமட்நபி,
2. சிகண்டர் ராசா,
3.ரஷீட் கான், 4. மெஹிடி ஹஸன் மிராஸ்,
5. ஜெர்ஹார்ட் எரஸ்மஸ்.

மன்செஸ்டர் சிற்றியுடன்

## ஓராண்டு நீடிப்புக்கு இணங்கிய குவார்டியோலா



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முகாமையாளரான பெப் குவார்டியோலா, ஓராண்டு ஒப்பந்த நீடிப்புக்கு இணங்கியுள்ளார்.

இத்தகவல் குறித்து கருத்துத் தெரிவிக்க சிற்றி மறுத்துள்ளபோதும் சிற்றியுடன் 2016ஆம் ஆண்டு இணைந்த குவார்டியோலா புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட இணங்கியுள்தாக பல்வேறு தகவல்மூலங்கள் குறிப்பிட்டுள்ளன.

குவார்டியோலாவின் சிற்றியுடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகால முடிவில் இரத்தாவதாகக் காணப்பட்டிருந்தது.

சிற்றியுடன் 18 பட்டங்களை குவார்டியோலா வென்றுள்ளார்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

## ஈக்குவடோரிடம் தோற்ற கொலம்பியா

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டிகளில் கொலம்பியாவில் புதன்கிழமை (20) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோர் வென்றது.



ஈக்குவடோர் சார்பாகப் பெறப்பட்ட கோலை இன்னர் வலென்சியா பெற்றிருந்தார்.

இதேவேளை தம்நாட்டில் நடைபெற்ற உருகுவேயுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பிரேஸில் சமப்படுத்தியது. பிரேஸில் சார்பாகப் பெறப்பட்ட கோளை ஜெர்சன் பெற்றதோடு, உருகுவே சார்பாகப் பெறப்பட்ட கோலை பெடெரிக்கோ வல்வெர்டே பெற்றிருந்தார்.

தேசங்களுக்கான லீக்:

## சமநிலையில் நெதர்லாந்து – பொஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவியா போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், தமது நாட்டில் புதன்கிழமை (20) நடைபெற்ற நெதர்லாந்துடனான குழு சி போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பொஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவியா சமப்படுத்தியது.



பொஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவியா சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்மெடின் டெமிரோவிச் பெற்றதோடு, நெதர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை பிரயன் பிரோபி பெற்றிருந்தார்.

இதேவேளை தம்நாட்டில் நடைபெற்ற ஜேர்மனியுடனான குழு சி போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஹங்கேரி சமப்படுத்தியது. ஜேர்மனி சார்பாக பேலிக்ஸ் மெச்சா பெற்றதோடு, ஹங்கேரி சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமினிக் ஸோபோஸ்லாய் பெறப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தம்நாட்டில் நடைபெற்ற துருக்கியுடனான குழு எச் போட்டியை 3-1 என்ற கோல் கணக்கில் மொன்ரனீக்ரோ வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 21 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.